# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 25.02.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆணையாளர்/தனிஅலுவலர்
தேவகோட்டை நகராட்சி

**பொருள்: 17**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 2021 –2024 ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினதந்தி நாளிதழில் 16.02.2021 அன்று அறிவிப்பு செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 17220 / – கீழ்காணும் விபரப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| நாளிதழ் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|
| தினதந்தி | Bill . No : MDU 2021 - 0016342 Dt 16.02.2021 | Amount = Rs. 17220 / - |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்: 18**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் குத்தகை உரிமையாணைகள் (லைசன்ஸ்) 01.04.2021 முதல் 31.03.2024 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொது ஏலம் மற்றும்ஒப்பந்தப்புள்ளிகள் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்படைக்கவும் ஓராண்டு உரிமையாணைகள் மற்றும் இதர குத்தகை இனங்கள் குறித்த 2021–2024ம், ஆண்டுக்கான ஏல அறிக்கை மற்றும் அவ்வினங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் ஒப்புதல் அளிக்கவும், ஏலம் மற்றும் ஒப்புந்தபுள்ளி அறிக்கை மற்றும்பொது கட்டுபாடு விதிகளை வெளியீடு செய்யவும் ஏல அறிக்கை மற்றும் குறுகியகால மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை அவ்வப்போது நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களுக்கும் கீழ்கண்டவாறு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## 2021–2024ம் ஆண்டுக்கான ஏல அட்டவணை

| வ. எண் | இனம் என் | உரிமையான விபரம் | காப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | சால்வன்சி சான்றிதழ் தொகை | சொத்து பெருமான சான்றிதழ் இல்லையெனில் கூடுதல் காப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | உரிமையாணை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 4 | நகராட்சி சாலை ஒரங்களில் உள்ள மரங்களின் மேற்பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம். | 2,000 | 2000 | 1000 | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை |
| 2. | 7 | பேருந்து நிலைய தொலைக்காட்சி பெட்டி | 10,000 | 20,000 | 10,000 | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை |
| 3. | 11 | இராம்நகர் கட்டணக்கழிப்பறை வசூல் | 50,000 | 1,00,000 | 50,000 | 01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை |

**அலுவலகக்குறிப்பு–**

1) முதல் 3 முடிய உள்ள குத்தகை இனங்கள் 2021ம், ஆண்டு ஏப்ரல் முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச் முடிய உள்ள காலம் அல்லது ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் மஉரிமம் காலமாகும். நஷ்டத்தை காரணம் காட்டி பின்வரும் ஆண்டுக்கு தொடர உரிமம் கோர உரிமையில்லை.
2) 2021–2024ம், ஆண்டிற்கு மேலே குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மட்டும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
3) இக்குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய விளம்பரங்கள் செய்வதற்கும் அதற்குரிய பிற செலவுகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேலே குறிப்பிட்ட அனைத்து இனங்களுக்கும் பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அனுமதிக்கலாம்.

## பொருள் 19

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி 2020–2021–ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 16.02.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிகு உட்பட்ட வார்டு 12 விநாயகபுரம் மற்றும் வார்டு 16 வெள்ளைஊரணி மேற்கு குறுக்குத்தெரு ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 9.95 | கா.காசிலிங்கம் | –0.10% குறைவு |
| | | | T.பாண்டி | 3.28% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

## <u>பொருள்: 20</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட நித்திய கல்யாணிபுரம் பகுதியில் உள்ள 10 –வது தொகுதி நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு புதிய பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளியான செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் முலம் தினசரி நாளிதழான மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ் காணும் விபரப்படி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| நாளிதழ் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|
| முாலை முரசு | MDU – D 20100 113<br>29.10.2020 | 4990.00 |

மேற்காணும் நாளிதழ் நிறுவனத்திற்கு தொகை ரூ – 4990 / – க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள்: 21</u>

உயிர்கொல்லி நோயான கொரொனா வைரஸ் காய்ச்சல் தமிழத்தில் தற்போது மீண்டும் பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான கிருமி நாசினிகள் முன் ஏற்பாட்டின் அடிப்படையில் வாங்கி இருப்பில் வைத்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் கொரொனா தடுப்பு பணிக்கு தேவையான கிருமி நாசினிகள் வாங்குவதற்கு நகராட்சி சட்டம் 1920 பிரிவு –15ன், கீழ் பணியின் அவரச அவசியம் கருதி பொதுமக்கள் நலனன கருத்தில் கொண்டும் பொது சுகாதாரம் மற்றும் உயிர் அவசியம் கருதி கிருமிநாசினிகள் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு பவுடர் ஆகிய பொருட்கள் வாங்கிட உத்தேச செலவீனத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ)கொரோனா உயர்கொல்லி பரவி வருவதால் பொதுமக்கள் மற்றும் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் உயிர் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் வழஙகப்பட்ட முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

## <u>பொருள்: 22</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவின் கீழ் இயங்கி வரும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2021–2022ம், ஆண்டுக்கான இன்சூரன்ஸ் செய்வது அவசியமாகிறது.

**<u>வாகன விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 1) | டிப்பர் லாரி | TN63 AQ1534 |
| 2) | டாடா ஏசி | TN63 AR5166 |
| 3) | டாடா ஏசி | TN63 AR 5177 |

மேற்படியான மூன்று வாகனங்களும் இன்சூரன்ஸ் புதுப்பிக்க ஆகும் மொத்த செலவு ரூ.73,557/– (எழுபத்தி மூவாயிரத்தி ஐநூற்றி ஐம்பது ஏழு) மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)பொதுசுகாதார பணி என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள்: 23</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரம் சுகாதாரப்பிரிவின் கீழ் உள்ள வார்டுகளில் தற்போது கோடைக்காலம் தொடங்கியுள்ளதால் நீரினால் பரவக்கூடிய தொற்று நோய்களை வயிற்றுக்போக்கு, காலரா மற்றும் டைப்பாய்டு போன்ற நோய்கள் பாதுகாப்பில்லாத குடிநீரால் பரவக்கூடிய அபாயம் உள்ளது. எனவே நகராட்சி மூலம் விநியோகம் செய்யும் குடிநீரில் போதுமான அளவு குளோரின் அளவு உள்ளதா என்பதை பரிசோதனை செய்து சரிபார்க்க பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்களால் மற்றும் பணியாளர்களுக்கு குளோராஸ்கோப் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. எனவே பொது சுகாதார நலநன கருத்தில் கொண்டும். பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள ஆகும் உத்ரேச செலவு துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படி ரூ.15000/– க்கு ( பதினைந்து ஆயிரத்திற்கு) பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள்: 24</u>

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் வணிக வளாகங்கள் மற்றும் கல்வி நிலையங்கள், தொழில்துறை நிறுவனங்கள் போன்றவற்றில் டெங்கு காய்ச்சல் உருவாக்கும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் வகையில் இந்நகராட்சி மூலம் DBC பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் கொசுப்புழுவானது கிணறு தண்ணீர் தொட்டிகள் (மேல்நிலை மற்றுகீழ்நிலை (Sump) குளிர்சாதன பெட்டியின் பின்புற நீர்வடி அமைப்புகள் ஆகியவற்றில் அதிகமாக வளரும் வாய்ப்புள்ளது. எனவே அவற்றை பார்வையிட்டு கொசுப்புழு வளர்ச்சியினை ஒழிக்கும் பொருட்டு கீழ்காணும் பொருள்கள் வாங்கி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>தேவையான பொருட்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | Rechargeable Torch light | 30 எண்ணம் |
| 2. | அலுமினிய கரண்டி | 30 எண்ணம் |
| 3. | ஸ்குரு –டிரைவர் | 30 எண்ணம் |
| 4. | அலுவமினிய வாளி சிறியது | 30 எண்ணம் |
| 5. | ஒளிரும் சட்டைகள் | 30 எண்ணம் |
| 6. | மரக்கண்டி | 30 எண்ணம் |

மேற்காணும் பொருள்களை பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டும். பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிபெற்று பணிமேற்கொள்ள துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படி உத்தேசசெலவினம் ரூ.50,000/–க்கு, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ) பணியின் அவசரம் கருதி உள்ளுர் குறைந்த விலைப்புள்ளி பெற்று பணி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை  நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்காக.

**பொருள்: 25**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக எழுதுபொருட்கள், படிவங்கள் கணிணி டோனர்கள் மற்றும் பணமதிப்பு ரசீதுகள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ் நிறுவனம் திருச்சி மூலம் 2021—2022 நடப்பு நிதி ஆண்டுகளில் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.10,00,000/— த்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:—** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்: 26**

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் மொத்தம் 13582 குடியிருப்புகள் மற்றும் 1182க்கும் மேற்பட்ட வியாபார நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் உள்ளன. மேற்படி குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களை வாராந்திர முறைப்படி (6 Day Block) டெங்கு கொசுப்புழு ஒழிப்பு களப்பணிகள் மேற்கொள்ள 25 DBC பணியாளர்களை மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. போதுமான பணியாளர்கள் இல்லாததால் மேற்கூறிய பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. அதனடிப்படையில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியினை செவ்வனே மேற்கொள்ளும் பொருட்டு கூடுதலாக 20 DBC பணியாளர்களை நியமனம் செய்து பணி மேற்கொள்ள துணை இயக்குநர் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை — சிவகங்கை அவர்களிடம் கடித வாயிலாக கோரப்பட்டதன்படி மேற்படி கடிததத்தின் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டு துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் — சிவகங்கை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.6712/B4/2019 நாள் 28.08.2020ம் தேதிய அனுமதியின்படி தற்போது டெங்கு கொசுப்புழு பெருக்கம் அதிகரித்து வருவதாலும் மீண்டும் தமிழகத்தில் கொரானோ நோய் தொற்று அதிகமாக பரவி வருவதாலும், பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு தற்போதுள்ள 25 DBC பணியாளர்களுடன் கூடுதலாக 20 DBC பணியாளர்களை நியமனம் செய்து கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் மற்றும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு களப்பணி மேற்கொள்ளவும் குறிப்பின்படி தற்போதுள்ள 25 DBC பணியாளர்களுடன் கூடுதலாக 20 DBC பணியாளர்கள் சேர்த்து 45 DBC பணியாளர்களை மேற்படி பணியில் ஈடுபடுத்திக்கொள்ள ஆறு மாத காலத்திற்கு தோரயமாக ஆகும் செலவு ரூ.17,50,000/—க்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:—**

அ) தற்போது விவோக அறக்கட்டளை நிறுவனத்தின் மூலம் 25 DBC பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் காலம்31.03.2021—வுடன் முடிவடைய உள்ளதால் 01.04.2021 முதல் ஆறுமாத காலம் பணி நீடிப்புஉத்தரவு வழங்கவும் மற்றும் 01.03.2021 முதல் கூடுதலாக 20 DBC பணியாளர்களைக் கொண்டு இந்நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணியினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்: 27**

தேவகோட்டை நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையின்படி இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு மின்னனு டோக்கன் இயந்திரம் மற்றும் மின்னனு எடை இயந்திரம் வாங்க அறிவுறுத்தியதன் அடிப்படையில் கீழ்காணும் பொருள்கள் வாங்குவது அவசியமாகிறது.

1) மின்னனு டோக்கன் இயந்திரம்.
2) மின்னனு எடை இயந்திரம்.

மேற்காணும் பொருள்கள் வாங்கி பயன்படுத்த வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.50,000/— க்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சிபொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்: 28**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் 27 வார்டுகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளை முறையாக மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தனித்தனியே பிரித்து பெறுவதற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் 41 தள்ளுவண்டிகள் (Phshcert) களின், சக்கரங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது மிகவும் தேய்மானம் அடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிப்படைகிறது. எனவே கீழ்குறிப்பிட்ட விபரப்படி பணிமேற்கொண்டு பழுது நீக்கி பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

| விபரம் | | |
|---|---|---|
| 1. | முன்புற சக்கரங்கள் — பெரியது | 42 X 2 = 82 |
| 2/ | பின்புற சக்கரங்கள் — சிறியது (பிளாஸ்டிக் மற்றும் ரோலருடன் கூடியது) | 41 X 2 = 41 |

மேற்காணும் பணியானது பொதுசுகாதாரப்பணி என்பதால் துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி, பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடன் பணி மேற்கொள்ளவும் அதற்காகும உத்தேச செலவீனம் ரூ.4.50 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:—**

அ) மேற்படி பணியின் பொதுசுகாதார நலன்கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணியின் செலவீனத்தை நகராட்சிபொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்: 29**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 12880 வீடுகள் மற்றும் 1211 வணிக வளாகங்களிலும், தினமும் குப்பைகளை திடக்கழிவு மேலண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம்பிரித்து பெற்று தன்மையுள்ள குப்பைகளை நுண்ணுயிர் செயலாக்க மையத்தின் மூலம்

உரமாக்கல் திட்டத்தில் இயற்கை உரம் தயார் செய்யவும் பிற கழிவுகளை தரம்பிரித்து வைக்கவும் திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் கையாளுதல் விதிகள் –2000ன்படி, தேசிய பசுமை தீர்ப்பாய ஆணையர் அவர்கள் பலமுறை தெரிவித்துள்ளார், இதன்படி தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதல்நிலை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகள் மூன்று சக்கர மிதிவண்டி BOV வாகனங்களில் மூலம் மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கு எடுத்து செல்லவும், இந்நகராட்சி பகுதிகளில் குப்பைகளை பிரித்து பெறவும் எவ்விதமான பிரத்யோகமான கொள்கலன்களும் இல்லை. எனவே கீழ்குறிப்பிட்ட விபரப்படி கொள்கலன்கள் வாங்கி பணி மேற்கொள்ள பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | தள்ளுவண்டிகள் 70 லிட்டர் கொள்கலன் – 4வீதம் | 41 | பச்சை நிறம் 41 X 03 = 123<br>ஊதா நிறம் 41 X 01 = 41<br>164 |
| 2 | BOV வாகனங்களில் 4 வீதம் | 26 | பச்சை நிறம் 26 X 03 = 78<br>ஊதா நிறம் 26 X 01 = 26<br>104 |
| 3 | இலகுரக வாகனங்கள் டாடா ஏசி (200 லிட்டர் கொள்ளளவு) 6 வீதம் | 4 | 04 X 06 = 24 |

மேற்குறிப்பிட்ட விபரப்படி தள்ளுவண்டிகள், மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் BOV வாகனங்களுக்கு தேவையான கொள்கலன்கள் வாங்க துப்பரவு ஆய்வாளரின் குறிப்பின்படி, மேற்காணும் பணி பொதுசுகாதார பணி என்பதால் பணிகளின் அவசர அவசியம் கருதியும் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டின் முக்கியத்தினை கருத்தில் கொண்டும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடன் பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவீனம் துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி ரூ.6.00 இலட்சத்திற்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

அ) மேற்படி பணியின் பொதுசுகாதார நலன்கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சிபொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

***(ஒப்பம்)ப.அய்யனார்***

***தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ)***